கொள்கையை விட்டு விட்டதா திராவிடர் கழகம்?

கலி. பூங்குன்றன்

கொள்கையை விட்டு விட்டதா திராவிடர் கழகம்?

— கலி. பூங்குன்றன் —

திராவிடர் கழக வெளியீடு
பெரியார் திடல், சென்னை - 600 007.

முதற்பதிப்பு - 1996 (செப்டம்பர்)

நன்கொடை (குறைந்த அளவு) ரூ.2.00

அச்சிட்டோர்: 'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,
50, ஈ.வெ.கி. சம்பத் சாலை, சென்னை - 600 007.

கொள்கையை விட்டு விட்டதா திராவிடர் கழகம்?

எதிர் நீச்சல் போடுவது சமுதாயப் புரட்சி இயக்கம்! எதிர்ப்புகள் எதிரிகளிடத்திலிருந்து மட்டுமல்ல; விவரம் புரியாத சொந்த இன மக்களிடத்திலிருந்து மட்டுமல்ல; இயக் கத்திலிருந்த இயக்கத்தைப் புரிந்தவர்கள் என்று கருதப்பட்ட வர்களிடமிருந்தும் 'எதிர்ப்பு ஈட்டிகள்' கொம்புத் தீட்டிப் பாயும்.

எட்டுத் திசைகளையும் பார்க்கும் கண்கள் தேவைப்படுகி றது - 24 மணி நேரத்தையும் கண்காணிக்கும் உழைப்பு அவசியமாகிறது!

நாணயமற்ற எதிரிகள் ஒரு பக்கம்; திரிபுவாதம் செய்யும் 'திறமை'யில் கை தேர்ந்தவர்கள் இன்னொரு பக்கம்; உள்ளுக் குள் இருந்து வெளியேறித் தோள் தட்டும் தொகையினர் மறுபக்கம்!

தடை ஓட்டம்!

இவற்றையெல்லாம் கடந்து தடை ஓட்டத்தில் பயிற்சி பெற்றவர்களால்தான் திராவிடர் கழகத்தை நடத்தமுடியும். தந்தை பெரியார் நடத்தினார்; அன்னை மணியம்மையார் நடத்தினார்; தமிழர் தலைவர் மானமிகு கி. வீரமணி இன்று நடத்துகிறார்!

குறைகள் சொல்வது எளிதுதான். ஒரு கணம் இப்படி நினைத்துப் பார்க்க வேண்டும். அய்யா, அம்மா மறைவுக்குப் பிறகு ஆசிரியர் வீரமணி அவர்களின் உழைப்பும் முயற்சியும்

முனைப்பும் இல்லாமற் போயிருந்தால்... யார் தலைமை தாங்கி இருப்பார்கள்?... பெரும்பாலோருடைய கண் குத்திப் பார்வையெல்லாம் தந்தை பெரியாரின் அறக்கட்டளைச் சொத்து மீதுதானே!

அதே நேரத்தில் அய்யா அவர்களின் மறைவிற்குப்பிறகு அதன் நிலை என்ன? வருமான வரித்துறை என்கிற கூரிய கத்தியின் முனையிலே அல்லவா அதன் உயிர் நாடி ஊசலாட்டம் போட்டது! பார்ப்பன ஆதிக்கபுரியாயிருந்த அந்த நெருப்பு வட்டத்திலிருந்து அதனை மீட்டு, அறக்கட்டளை என்று அங்கீகரிக்கச் செய்தாரே - அந்த ஒன்றே ஒன்றுக்காக மட்டும் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு குழந்தைக்காவது வீரமணி என்று பெயர் சூட்ட வேண்டுமே!

காஞ்சி மடத்தைப் பாருங்கள்

எதிரிகளின் பொருளாதார பலுவோடு ஒப்பிடும் போது நாம் சாமானியவர்கள்தான். எதிரி முகாம்களில் என்ன நடக்கிறது? யாரேனும் மூச்சு விடுகிறார்களா? காஞ்சி மடத்திலிருந்து இரவோடு இரவாக வெளியேறிய சாமியாரை எவ்வளவுப் பவித்திரமாகக் கொண்டு வந்து சேர்த்து ஒன்றும் நடக்காதது போல உலா வருகிறார்கள். குடியரசுத் தலைவராக இருந்த மனிதன் தன் அதிகாரத்தை எவ்வளவு பங்கு செலவழித்தார்?

இங்கு எந்தத் தவறும் நடக்காது இருக்கும்போதே கை வைத்து காது வைத்து, மூக்கு வைத்துப் பேசுகிறார்களே... இன நலக் கண்ணோட்டத்தில் தந்தை பெரியாரியலைப் படித்த இலட்சணம் இதுதானா?

இந்த யோக்கியதையில் இருந்தால் தமிழ்ச் சாதி கடைதேறுவது எந்த கால கட்டத்தில்?

மடம் நடத்துகிறோம் என்று தமிழகத்தின் முதலமைச்சர் பேசுகிறார். தி.மு.க.வுக்கே 'ஜெ' போட்டு இருந்தால் மடை மாற்றிப் பேசி இருப்பார் என்பது நமக்குத் தெரியும்.

நமக்கும் ஆசைதான்... அதற்கேற்ற உணர்வு இல்லையே - ஆட்சி நடப்பு இல்லையே - என்ன செய்ய?

பார்ப்பனர்களுக்குக் காஞ்சி மடம்தான் பாதுகாப்பு அரண் என்றால், திராவிடர்களுக்கு பெரியார் திடலும், திராவிடர் கழகமும்தான் சந்தேகமில்லாமல் பாதுகாப்பு ''மடம்!''

சங்கர மடப் பூச்செண்டு

சங்கர மடங்களிலிருந்து வாழ்த்துகளும், பூச்செண்டுகளும், பிரசாதங்களும் யாரை நோக்கி வருகின்றன என்பதைத் தமிழர்கள் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

ஒரு பார்ப்பன முதலமைச்சரைப் பயன்படுத்தி சமூக நீதிக்கு ஒரு பாதுகாப்புச் சட்டத்தை திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் நிறைவேற்றியதைப் பார்த்து, பார்ப்பனர்கள் நெருப்புப் பொறியாய்த் துடிக்கிறார்கள், அவர்களோடு சேர்ந்துகொண்டு சூத்திரத் தமிழர்களும் வீரமணியைச் சுட நினைக்கிறார்கள் என்றால் அந்தத் தமிழர்களை என்ன 'நாமகரணம்' சூட்டி அழைப்பது?

பிரச்சினை என்ன... அதன் பலன் என்ன... அது யாருக்குப் போய்ச் சேர்கிறது என்பதைக்கூட - தந்தை பெரியார் அறுபதாண்டு உழைப்புக்குப் பிறகும் தமிழர்களால் புரிந்துகொள்ள முடியாதா?

அறியாமையால் ஆர்ப்பரிக்கிறவர்களைத் திருத்த முயலுவோம்! பொறாமையால் துடிக்கிறவர்களை நாம் ஒன்றும் செய்யவேண்டாம். அழுக்காறு என்னும் ''அந்தப் பாவியே'' அதனைப் பார்த்துக் கொள்ளும்! குறளோவியம் தீட்டுபவர்களுக்கா நாம் புத்திமதி கூறமுடியும்?

சங்கர மடம் பூச்செண்டு அனுப்பினால் நாங்கள் பொறுப்பா என்ற கேள்வி நியாயமாகக்கூட இருக்கலாம்... அனுப்புபவர்களுக்கு உள்நோக்கம் இருக்கிறது. வலையை வீசிப் பார்ப்போமே... சிக்கினால் சிக்கட்டுமே என்கிற ஒரு வகை அணுகுமுறைதான்... அதில் வெற்றி பெற்றுவிட்டார்களே...

தாய்ப்பாலை துப்புவதா?

ஒரு பார்ப்பன டாக்டர் - இராமமூர்த்தி என்பவர் நெருக்கடி காலத்தில் டாக்டர் கலைஞருக்குச் சிகிச்சை அளித்தவிட்டா ராம். பார்ப்பனர் அல்லாத டாக்டர்கள் ஓடி ஒளிந்துவிட்டார்க ளாம்! அதனால்.... பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதார் என்ற கண்ணோட்டமே... பார்வையே... கொள்கையே தவறு உடையதாம்! திராவிட இயக்கத்தில் பிறந்து வளர்ந்து 75 வயதை எட்டும் தமிழக முதலமைச்சர் கூறுகிறார் என்றால்... இந்த அரசியல்வாதிகளை நம்பி திராவிட இயக்கக் கொள் கையை ஒப்படைத்துவிட முடியுமா? தன் சொந்த நலனுக்கா கத் தாம் குடித்து வளர்ந்த தாய்ப்பால் கொள்கையையே துப்புகின்ற துரோகத்தை என்னென்று சொல்வது! நெருக்கடி காலம் என்பது பார்ப்பனர்களின் பொற்காலம் என்பதும் சூத்திரர்களுக்கான 'கழுமரம்' என்பதும்கூட பார்ப்பனர் அல் லாதார் இயக்கத்தின் வழிவந்தவருக்குத் தெரியாமல் போய் விட்டதா?

தன் சொந்த பிரச்சினைக்காக தன்னை மனிதனாக்கிய பார்ப் பனர் - பார்ப்பனர் அல்லாதார் கொள்கையைப் பலி கொடுக் கத் தயாராகி விட்டார்களே!

அதன் விளைவு.. ஆட்சிச் சக்கரம் அக்கிரகாரத்தை நோக்கிச் சுழல ஆரம்பித்துவிட்டதே... ''நல்லாசிரியர் விருது'' ராதா கிருஷ்ண அய்யர் பெயர் மாற்றம் பெறும் அளவுக்கு வேகமா கச் சுழலுகிறதே!

நாத்திகம் என்பது...

நாத்திகம் என்பது தனிப்பட்டவருடைய கொள்கையாம்... அதை ஒரு இயக்கமாக நடத்தக் கூடாதாம்... தமிழக முதல்வர் கலைஞர் கூறி இருக்கிறார் - ஆழ்வார் வீரப்பனார் பிறந்த நாள் விழாவில் ('முரசொலி' 10.9.96) சங்கரமடத்துக்கு இது எவ்வளவு ருசியாக இருந்திருக்கும்!

தந்தை பெரியார் வலியுறுத்தி வந்த நாத்திகம் தனி மனித னின் கொள்கையா?... இங்கு ஆத்திகம் என்பது எது? நாத்திகம் என்பது எது?

''நாஸ்திகம் என்றால் ஸ்வாமியில்லை என்று சொல்கிற நிரீச்வர வாதம் என்றுதானே இப்போது நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இது தப்பு. ஸ்வாமியில்லை என்று சொல் லிக் கொண்டேகூட ஆஸ்திகர்களாக இருக்கமுடியும். அப்படிப் பட்ட பல பேர் இருந்திருக்கிறார்கள். இது என்ன வேடிக்கையாக இருக்கிறது? அப்படியானால் ஆஸ்திகம் என்றால் வேதத்தில் நம்பிக்கை இருப்பது என்றுதான் அர்த்தம்.

வைதீக வழக்கை ஆட்சேபிப்பதுதான் நாஸ்திகம் என்பதே ஞான சம்பந்தரின் கொள்கையாகவும் இருந்திருக்கிறது. ஈசுவர பக்தி இல்லாமலிருப்பதுங்கூட அல்ல'' என்கிறார். கலைஞர் அவர்களால் நல்லவர் என்று போற்றப்படும் மறைந்த காஞ்சி சங்கராச்சாரியார் திருவாளர் சந்திர சேகரேந்திர சரஸ்வதியார் ('தெய்வத்தின் குரல்' இரண்டாம் தொகுதி - பக்கம் 407 - 408)

''வேதங்களும், ஸ்மிருதிகளும் தருமத்தின் இருப்பிடங்கள். ஆதலால் இவைகளை அறிவுப் பூர்வமாக ஆராய்ந்து எவரா வது கண்டித்தால் அவர்கள் வேதத்தின் எதிரிகள்; வேதத்தின் எதிரிகள்தான் நாஸ்திகர்கள்; அவர்களை ஊரை விட்டே துரத்திட வேண்டும்'' என்று மனுதர்ம சாஸ்திரமும் கூறுகிறது!

பக்தி என்பது...

இதே வார்த்தைகளைத்தான் ஜாபாலியை நோக்கி இராம னும் கூறுகிறான். சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் ''சக்ர வர்த்தித் திருமகன்'' நூலுக்கு மறுப்பு நூல் எழுதிய கலைஞர் அவர்களுக்கு ''வசதியாக'' இது மறந்துபோய்விட்டதா?

''க்ருதா யுகத்தில் ஸத்தியமும், த்ரேதாயுகத்தில் வைராக்கிய மும் மோக்ஷத்திற்குச் சாதனங்களாக இருந்தன. ஆனால், இக்கலியில் பக்தியினாலேயே மோக்ஷம் கிடைக்கிறது'' என்று நாரத ரிஷி கூறுகிறார் என்று சங்கராச்சாரியாரின் ''காமகோடி'' (மே 1994 இதழ் பக்கம் 34) கூறுகிறது. இங்கே பக்தி என்பதும், ஆஸ்திகம் என்பதும் எதைச் சார்ந்து நிற்கிறது?

அடிப்படை விரோதப் பார்வை

தந்தை பெரியார் நடத்திய நாத்திக இயக்கத்தை இந்தப் பார்வையில் பார்க்க வேண்டாமா? ஈரோடு 'குடியரசு' குருகுலத்தில் பயின்ற மாணவன் என்று கூறுகிறவருக்கு இந்த அடிப்படைத் தெரியாமல் போனது மிகப் பரிதாபமே!

தந்தை பெரியார் கண்ட இயக்கத்துக்கு இவ்வளவு வரலாற்றுப் பின்னணியும் சமுதாய இயல் கோட்பாடும் இருக்கும் போது, நாத்திகம் என்பது தனி மனிதனின் கொள்கை - அதை ஒரு இயக்கமாக நடத்தக் கூடாது என்று சொல்லுவது - இயக்கத்தின் அடிப்படையையே புரிந்துகொள்ளாத அபத்தம்; தந்தை பெரியாரை ஒழுங்காகப் படிக்காத அரைகுறைத்தனம்!

''தந்தை பெரியார் தனி மனிதரல்ல; ஒரு சகாப்தம் - கால கட்டம் - திருப்பம்'' - என்றார் அறிஞர் அண்ணா. அத்தகைய தலைவரின் நாத்திகக் கருத்தை தனி மனிதர் கருத்து; அதை ஒரு இயக்கமாக நடத்தக்கூடாது என்று டாக்டர் கலைஞர் கூறுகிறார். தந்தை பெரியார் என்ற தனி மனிதர்தான் ஒரு சகாப்தமாகி இடிபாடுகளில் கிடந்த இந்த நாட்டை எடுத்துத் திருத்தினார்.

எந்தக் கருத்தையும் ஒரு தனி மனிதர்தான் சொல்லி இருப்பார்... இது என்ன புதுக் குழப்பம்? ஒருக்கால் 'அசரீரி' சொன்னால்தான் அவர் ஏற்றுக்கொள்வாரோ என்னவோ!

தவறான புரிதலைக் கொண்ட ஒரு ஆபத்தான போக்கு இது என்பதை இந்தக் கால கட்டத்தில் திராவிடர் கழகம் எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளது. தந்தை பெரியார் வைதிகத்தையும், வேதத்தையும் மறுத்த நாத்திகர் மட்டுமல்ல; உலகியலில் பொருள் முதலாதத் தன்மையிலும் கடவுளை மறுக்கும் நாத்திகரான மாமேதை என்பதுதான் உண்மை!

நல்ல நகைச்சுவை!

பார்ப்பனர் எதிர்ப்பு - ஆத்திக எதிர்ப்பு என்கிற தண்டவாளங்களை விட்டு வெளியே வாகனத்தை ஓட்ட முயற்சிப்பவர்கள்; தடத்தில் முறையாக ஓட்டிச் செல்பவர்களைப் பார்த்து, உதட்டளவில் பெரியாரை உச்சரிப்பவர்கள் என்று விமர்சிப்பது கடைந்தெடுத்த நகைச்சுவை! ஒன்றும் வேண்டாம் - அழுக்குருண்டை பிள்ளையாரும் ஆண்டவனா என்று ஒருவரி எழுதச் சொல்லுங்கள் பார்க்கலாம் அவர்கள் ஏட்டில்... இந்த நிலையில் உள்ளவர்கள்தான் எகத்தாளம் பேசுகிறார்கள்.

அரசியலுக்குச் சென்றவர்கள்தான் தத்துவார்த்தப் பாதையைவிட்டும், தவறான வியாக்கியானங்கள் அளித்தும் எதிர்த் தத்துவத்துக்கு இலகுவாகப் போய்விட்டார்கள் என்றால், திராவிடர் கழகமும், அதன் பொதுச் செயலாளரும்,சரியாகக் கொள்கைவழி செயல்படவில்லை என்று குற்றம் சுமத்துபவர்கள் என்ன சொல்கிறார்கள்? பெரியார் நினைவு நாளன்று எப்படி 'இராவண லீலா' நிகழ்ச்சி நடத்தலாம் என்று கேள்வி தொடுக்கிறார்கள்.

பெரியார் நினைவு நாள். என்பது வரலாற்றின் குறிப்பு நாள்; அதனைக் கொள்கை வழிபட்ட செயல்பாட்டுக்குப் பயன்படுத்துவதுதான் பகுத்தறிவு! அந்நாளை சடங்காச்சார நாளாகக் கருத வேண்டும் என்று கூறுகிறார்களா? ஆத்திரமும், பொறாமையும், வந்தால் மனிதர்களை என்ன பாடுபடுத்துகிறது?

சேற்றை வாரி இறைக்கலாமா?

வெளியேறியவர்கள் - அல்லது வெளியேற்றப்பட்டவர்கள் தீவிரமாக செயல்படுவதுபற்றி வருத்தமில்லை. தாய் நிறுவனத்தின்மீது சேற்றை வாரி இறைப்பது - யாரைத் திருப்திப்படுத்த?

தந்தை பெரியார் காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு 49 விழுக்காடு என்றால் அவரது தொண்டர் மானமிகு வீரமணி அவர்களின் காலத்தில் 69 விழுக்காடாகத் தானே உயர்ந்தது?

எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த வருமான வரம்பு ஆணையை ஒழிக்கிறவரை கழகப் பொதுச் செயலாளர் வேறு பக்கம் கண்ணைத் திருப்பினாரா? அதை எம்.ஜி.ஆர். அவர்களே செய்தியாளர்களிடம் ஒப்புக் கொண்டாரே!

மண்டல் குழுப் பரித்துரை இலேசில் அமுலுக்கு வந்ததா? திராவிடர் கழகத்தின் 42 மாநாடுகளையும், 16 போராட்டங்களையும் உட்கொண்டுதானே பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வில் வெளிச்சத்தைக் கொடுத்தது!

வட இந்தியா உட்பட சமூக நீதி வழி, தந்தை பெரியாரின் அலை இன்றைய தினம் ஓங்கி அடிக்கிறது என்றால் அதற்கான காரணகர்த்தா திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் அல்லாமல் வேறு யார்? இதன்மூலம் பார்ப்பனர் எதிர்ப்பு என்பது தமிழ் நாட்டிலிருந்து இந்தியா முழுமையும் ஏற்றுமதி செய்யப்படவில்லையா?

புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பா - வீரமணிவேண்டும்! சி.பி.எஸ். இ - மோசடியா வீரமணிதான் வழக்குத் தொடுக்க வேண்டும் - போராட வேண்டும் - இதுதானே எதார்த்த நிலை! ஜாதி சங்கங்களை சமூக நீதிக் குரல் கொடுக்கும் அமைப்பாக மாற்றிய கைவண்ணம் யாருடையது?

26 ஜாதி ஒழிப்பு மாநாடுகள்

வேறு வகையில் ஜாதிய உணர்வு தலை நீட்டுகிறது என்கிற கால கட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் 26 ஜாதி ஒழிப்பு மாநாடுகளை (25.1.95 முதல் 28.8.95 முடிய) அடுக்கடுக்காய் நடத்திய மாமனிதர் யார்?

ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கிய பருவத்தில், அந்தப் பரிவாரங்களின் நச்சு வேர்களை நொறுக்கித் தரை மட்டமாக்கிட தமிழ்நாடு முழுவதும் ''மதவெறியை மாய்ப்போம் - மனித நேயம் காப்போம்!'' என்று வட்டார மாநாடுகளை நடத்தும் யுக்தியை மேற் கொண்ட கொள்கைவாதி யார்? 3.1.93-ல் நாகர்கோயி

விலே தொடங்கி 30.3.93-லே ஆவடியிலே முடிந்து, முத்தாய்ப்பாக ''காவிக் கொடி எரிப்பு'' வைபவத்தை சென்னையிலே நிகழ்த்திக் காட்டிய (18.4.1993) தோள்கள் எவரின் தோள்கள்?

ஆர்.எஸ்.எஸ். வகையறாக்களின் தானியம் தமிழ் மண்ணில் இன்றுவரை வேகாததற்கு உரிமை கொண்டாட இலட்சிய வேங்கை வீரமணி அவர்களைத் தவிர வேறு ஒருவர் விரலை மடக்க முடியுமா?

ஈழத் தமிழர் பிரச்சினை

ஈழத் தமிழர் பிரச்சினையில் இயக்க ரீதியாக ஈடுபாட்டுடன் எத்தனை எத்தனை நடவடிக்கைகள்!

மூட நம்பிக்கை ஒழிப்பு வரலாற்றில், சென்னை அண்ணாசாலையில் வறட்டுக் கவுரவம் பாராமல் தன் தோளில் தமுக்கை மாட்டிக் கொண்டு, பிள்ளையார் பால் குடிப்பதை நிரூபித்தால் ஒரு லட்சம் ரூபாய் - கொழுக்கட்டை தின்பதை நிரூபித்தால் இரண்டு லட்சம் ரூபாய் பரிசு என்று பிரச்சாரம் செய்து சவால் விட்டாரே... இதற்கு இணையாக இன்னொருவரைச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

கல்வி நிறுவனங்கள்

தமிழன் படித்தால் பார்ப்பானுக்குக் கண்ணோய் வருவது இயல்பு! பெரியார் அறக்கட்டளை நடத்தும் கல்வி நிறுவனங்கள்மீது சேற்றை வாரி இறைக்கத் துடிக்கிறார்களே தோழர்கள் - ஏன்?

பெரியார் அறக்கட்டளையின் கோட்பாட்டில் கல்விப் பணிக்கு முக்கியத்துவம் உண்டு. துவக்கி வைத்தார் தந்தை பெரியார். வளர்த்து வருகிறார் அறக்கட்டளையின் செயலாளராக இருக்கும் மானமிகு வீரமணி. இதிலென்ன குற்றம்?

நன்கொடை பெற்று சொந்தத்துக்குத் தூக்கிக் கொண்டு போய்விட்டாரா? பெரியார் நிறுவனம் வளர பொதுமக்களின்

ஒதி பயன்படுகிறது... கட்சிக்காரர்களின் வீட்டுப் பிள்ளைக ளுக்குப் பயன்படுகிறதா - கேட்கிறார்கள். நிச்சயம் பயன்படு கிறது... அதை விளம்பரப்படுத்த வேண்டுமா? இது ஒன்றும் அரசியல் கட்சியல்ல - விளம்பர வெளிச்சத்தில் குளியலாட!

ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளும், இராமகிருஷ்ண மடங்க ளும், நாராயண குரு (எஸ்.என்.டி.பி) இயக்கமும் சங்கர மடங்களும் கல்விக் கூடங்களை நடத்துகிறார்கள். பெரியார் அறக்கட்டளை நடத்துவது பஞ்ச மா பாதகமா?

கிருஸ்துவ மதத்தார் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி மதத்தை வளர்க்கிறார்களே - நாம் ஏன் அந்த யுத்தியைக் கையாளக்கூடாது? பெரியார் கல்வி நிறுவனங்களில் ஆயிரம் ஆயிரம் ஒடுக்கப்பட்ட பிள்ளைகள் படித்து வெளியேறி பயனுறு வாழ்க்கையை அமைத்துக்கொண்டு தானிருக்கிறார் கள். அவர்கள் வயிற்றிலடிக்க அப்படி என்ன ஆசை? பெண்களுக்குக் கல்வி என்பது தந்தை பெரியாரின் கொள்கை இல்லையா?

பெரியார் அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ்., பயிற்சி மய்யம்!

1989 தொடங்கி இன்று வரை பெரியார் அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ்., பயிற்சி மய்யத்தின் சார்பில் 900 பேர் பயிற்சி அளிக்கப்பட்டார்களே... அது என்ன குற்றமா?

அரசு நடத்தும் நிறுவனங்களைவிட பெரியார் மய்யம் அதிகம் தேர்ச்சியைத் தருகிறதே - அதற்காகப் பூரிக்க வேண் டாமா?

அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ்., தேர்வுகளில் வெற்றி பெறாத வர்கள்கூட மாநில அரசும், மய்ய அரசும் நடத்தும் பிற தேர்வாணைய தேர்வுகளில் வெற்றி பெற்று வேலை வாய்ப்பு களை ஈட்டி வருகிறார்களே - இதைப்பற்றி எல்லாம் தெரிந்து கொள்ளாமல், ஈவு இரக்கமின்றித் தூற்றுவது பார்ப்பனர்க ளைத் திருப்திப்படுத்தவா?

மருத்துவமனை நடத்துவது மனித நேயம் அல்லவா? தந்தை பெரியார் இயக்கத்தின் அடிப்படை மனித நேயத்தில் முகிழ்த்தது அல்லவா?

பெரியார் அறக்கட்டளைநிதி கொள்கைப் பிரச்சாரத்துக்குப் பயன்படவில்லையா?

''விடுதலை'' நடப்பது எப்படி?

''விடுதலை' நாளேடு அந்த அறக்கட்டளை சார்பில்தானே நடத்தப்படுகிறது! ''உண்மை'' இதழும் ''தி மாடர்ன் ரேஷன லிஸ்டும்'' அந்த நிதியிலிருந்துதானே வெளிவருகிறது! நூல்கள் வெளியீடு என்பதும் அந்த நிதியிலிருந்துதானே!

நாடெங்கும் புத்தகச் சந்தைகள் நடத்தி புது உத்வேகத்தை உண்டாக்கி இருக்கும் கால கட்டத்தில் நூல்கள் வெளியிடப்படுவதில்லை என்ற கூற்றில் பசை உண்டா? நவீன இயந்திரம் அச்சுக்கோர்ப்பு முறையுடன் பொலிவாக வெளி வருகிறது '''விடுதலை'' - அதற்கான கர்த்தா யார்?

ஆண்டு தவறாமல் அய்யா பிறந்த நாள் 'விடுதலை' மலர் வருவது மானமிகு வீரமணி அவர்கள் ஆசிரியர் பொறுப்பேற்ற கால கட்டத்தில் இருந்துதானே!

தந்தை பெரியார் கருத்துகள் பரவவேண்டும்; ஆய்வாளர்களுக்குக் கரு கிடைக்க வேண்டும் என்பதற்காக பெரியார் நூலகம் - ஆய்வகத்தை அமைத்தவரே ஆசிரியர்தானே!

''விடுதலை'' ''குடிஅரசு'' கருவூலங்களைக் காத்திட முன்பே பணிகள் தொடங்கப்பட்டு ஒரு பகுதி முடிந்து, இன்னொரு பகுதி இன்றைய நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் பாதுகாக்க ஏற்பாடுகள் துவக்கப்பட்டு விட்டன!

குறை கூறுவது திறமையா?

நல்லெண்ணத்தோடு பல திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. பல நிறைவேற்றப்பட்டு, சில நிறைவேறாமல் கால

தாமதம் ஆகலாம். இது நடைமுறை உண்மை! காலதாமதம் ஆனாலும் கண்டிப்பாகப் பணிகள் நடந்துதான் தீரும்!

அரசு தொடர்புடைய பணிகள் பல... அரசுகள் மாற்றங்களால் அதிகார வர்க்கத்தின் செயல்பாடுகளால் நினைத்த அளவுக்கு சில காரியங்கள் நடக்காமல் போயிருக்கலாம். நிர்வாகம் நடத்துபவர்களுக்குத்தான் அந்த சங்கடங்கள் புரியும். குற்றம் கண்டுபிடிப்பதற்கும் குறைகள் கூறுவதற்கும் பெரிய திறமையோ உழைப்போ தேவையில்லை.

இவ்வளவு நடந்திருக்கிறதே - இவ்வளவு வளர்ந்திருக்கிறதே என்று பாராட்ட வளமான மனம் வேண்டும்; பாலைவன மனத்தாரால், பொறாமை குணத்தாரால், எதிர்பார்த்து ஏமாந்த எண்ணத்தாரால் ஏட்டிக்குப் போட்டிதான் பேசமுடியும்.

சுகமாக வாழ வழியில்லையா?

சுகமாக இருக்கவேண்டும்; சொகுசாக வாழ வேண்டும். என்கிற எண்ணம் இருந்தால் நீதிபதிகளின் கொடும்பாவிகளைக் கொளுத்தும் போராட்டத்தையா தேர்ந்தெடுப்பார்கள் - அதுவும் ஒரு முதலமைச்சர் எச்சரித்த பின்னும், ஆவேசத்தோடு ஈடுபடுவார்களா? அரசு ஆணைகளை எரிப்பதும், காவிக் கொடிகளைக் கொளுத்துவதும், மறியலில் ஈடுபடுவதும், சுதந்திர நாளில் கறுப்புக்கொடியை ஏற்றுவதும், கறுப்புக்கொடி பிடிப்பதும் சுகவாசிகள் செய்யும் வேலையாக இருக்கமுடியுமா?

'மிசா' கொடுமையை அனுபவித்தவர் - 39 முறை கைது செய்யப்பட்டும், சிறைத் தண்டனை அனுபவித்தும் தழும்பு ஏறியவர். பல முறை கொலை முயற்சிக்கும் ஆளாக்கப்பட்டவர்!

எளிமையை வெறுக்கக்கூடியவராக இருந்தால் இப்படி நடந்துகொள்ள முடியுமா? பகுத்தறிவைப் பேசினால் போதாது, அதைப் பயன்படுத்திடவும் வேண்டும்.

சமுதாய அந்தஸ்து, வளமான சூழல் இவற்றின் பின்னணி இல்லாமல் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து தலைமைப் பொறுப்புக்கு வரும் ஒருவர்க்கு எவ்வளவுச் சங்கடங்கள் இந்த நாட்டில் என்பதற்கு ஆசிரியர் வீரமணி அவர்களே கண் கண்ட எடுத்துக்காட்டு!

சுகமாக வாழவேண்டும் என்று நினைத்தால் அதற்கு வழி முறைகளா இல்லை?

எத்தனை எத்தனையோ வழிமுறைகள் உண்டு. இருதய அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர் ஆயிற்றே - அத னைச் சாக்கிட்டுக்கூட எப்படி எப்படியோ நடந்து கொள்ள லாமே!

தொண்டருக்கும் முன் செல்வார்

ஆனால், தொண்டருக்கு முன் சென்றல்லவா சிறை ஏகுகி றார் - 'சி' கிளாசில் கூழ் குடிக்கிறார்.

கண்ணுள்ளவர்களுக்கு இவையெல்லாம் தெரியும்; காழ்ப்பு ணர்வு கொண்டவர்களின் கண்களுக்குமுன் கருந்திரை விழுந்து விடுகிறதே - என் செய்ய!

தெரிந்தோ தெரியாமலோ இயக்கத்துக்கு ஒரு நன்மையைச் செய்து விட்டார்கள்.

முன்னிலும் தோழர்கள் வேழமாகப் பிளிறுகிறார்கள் உணர்ச்சி எரிமலையாய்த் தகிக்கிறார்கள். தில்லை, நெல்லை, புதுகை, மதுரை என்று மாநாடுகளை அலை அலையாய் நடத்துகின்றார்கள். பேரணிகளில் முன்னிலும் அதிகமாக இளைஞர்கள் திரளுகிறார்கள்.

நம் தலைவரை தாக்குகிறார்களே நாக்கில் நரம்பின்றி என்ற வுடன், எடைக்கு எடை ரூபாய் நாணயம் கொடுத்த தோழர் கள், வெள்ளிக் கட்டிகளால் துலாபாரம் செய்கிறார்கள்.

இதுதான் திராவிடர் கழகம் - இது வரை தெரிந்து கொள்ளாத வர்கள் இப்பொழுதாவது தெரிந்து கொள்வது நல்லது!

இந்தப் பணியும், தொண்டும் எளிதான ஒன்றல்ல - எங்களுக்குத் தெரியும்; எதிர்ப்புகள் எல்லாத் திசைகளிலிருந்தும் சூழ்ந்து வந்து தாக்கும் - அவற்றைச் சந்தித்துப் பழக்கப்பட்டவர்கள்தாம் நாங்கள்! சந்தித்தது மட்டுமல்ல - அவற்றைச் சாதனையாக மாற்றிக் காட்டிய வரலாறும் எங்கள் கழகத்துக்கு உண்டு.

எத்தனைப் பட்டாளம் கூட்டி வந்தாலும் தயார் - சந்திக்கத் தயார்!

லட்சிய பலமும் நாணய பலமும்

எப்படி இருந்தாலும் திராவிடர் கழகம் 1925ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கம் என்னும் பேரால் தோன்றி பகுத்தறிவு இயக்கம், சம தர்ம இயக்கம், தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்றெல்லாம் முறையே ஆகி இன்று அவ்வளவு கொள்கைகளையும் கொண்டு தென் இந்திய நல உரிமைச் சங்கமாகிய (ஜஸ்டிஸ் கட்சி) திராவிடர் கழகம் என்னும் பேரால் ஒரு பெரும் பிரசார ஸ்தாபனமாக இருந்து வருகிறது.

இந்த 26 ஆண்டில் எத்தனையோ எதிர்ப்புகளையும் பிளவுகளையும் துரோக வஞ்சகங்களையும் சமாளித்து வந்திருக்கிறது. இதற்கு வந்த கஷ்டங்கள், தொல்லைகள் கொஞ்ச நஞ்சமென்று சொல்ல முடியாதவைகளாகும்.

இந்தக் கழகத்தில் பணியாற்றி விளம்பரமானவர்கள் எவரிலுமே துரோகிகளாக முடியாமல் தப்பிக் கொண்டவர்கள் மிக மிக அருமையென்றே சொல்லலாம். அப்படியெல்லாம் ஏற்பட்டும் அது கால் நூற்றாண்டுடிற்கு மேலாக உயிர் வாழ்ந்து வருவதோடு மேலும் மேலும் ஏதாவது ஒரு வழியின் காரணமாக வளர்ச்சியும் மேன்மையும் பெற்றுப் பயனளிக்கத்தக்கதாகவே ஆகிக் கொண்டே வருகிறது என்றால், அது ஒரு அதிசயமாகவே கருத வேண்டியதாகும்.

இந்தப்படியாக இந்த நாட்டில் இவ்வளவு எதிர்ப்புக்கும் பிளவுக்கும் துரோகத்திற்கும் ஆளாகி, ஒரு சிறு குறைபாட்டிற்கும் வளர்ச்சித் தடைக்கும் ஆளாகாமல் வளர்ந்து கொண்டே போய்க் கொண்டு இருக்கும்படியான ஸ்தாபனம் வேறொன்று இருப்பதாக யாராலுமே காட்ட முடியாததாகும். இதற்குக் காரணம் இதனுடைய லட்சிய பலமும் நாணய பலமுமேயாகும். அப்படிப்பட்ட இலட்சியம் என்ன? நாணய பலம் என்ன? என்பதுபற்றி சொல்வது மிகையாகாது என்றே கருதுகிறேன்.

— ஈ.வெ.ரா.

(‘விடுதலை’ *21.11.1951*)

வீரமணியின் பெயர்...

குறைகள் சொல்வது எளிதுதான். ஒரு கணம் இப்படி நினைத்துப் பார்க்க வேண்டும். அய்யா, அம்மா மறைவுக்குப் பிறகு ஆசிரியர் வீரமணி அவர்களின் உழைப்பும் முயற்சியும் முனைப்பும் இல்லாமற் போயிருந்தால்... யார் தலைமை தாங்கி இருப்பார்கள்?... பெரும்பாலோருடைய கண் குத்திப் பார்வையெல்லாம் தந்தை பெரியாரின் அறக்கட்டளைச் சொத்து மீதுதானே!

அதே நேரத்தில் அய்யா அவர்களின் மறைவிற்குப்பிறகு அதன் நிலை என்ன? வருமான வரித் துறை என்கிற கூரிய கத்தியின் முனையிலே அல்லவா அதன் உயிர் நாடி ஊசலாட்டம் போட்டது! பார்ப்பன ஆதிக்கபுரியாயிருந்த அந்த நெருப்பு வட்டத்திலிருந்து அதனை மீட்டு, அறக் கட்டளை என்று அங்கீகரிக்கச் செய்தாரே - அந்த ஒன்றே ஒன்றுக்காக மட்டும் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு குழந்தைக்காவது வீரமணி என்று பெயர் சூட்ட வேண்டுமே!

(— இந்நூலின் பக்கம் 3,4லிருந்து...)